Victims Services
Attorney General & Justice

# பாதிப்புற்றோர் உரிமை சாசனம்

*(பாதிப்புற்றோரது உரிமைகள் மற்றும் ஆதரவு சட்டம் 2013)*

Tamil/தமிழ்

நீங்கள் குற்றச்செயல் ஒன்றிற்குப் பலியானவர் என்றால் உங்களுக்கான உரிமைகள் உண்டு. இந்த உரிமைகள் 'பாதிப்புற்றோர் உரிமை சாசன'த்தில் அடங்கியுள்ளன. இந்த சாசனம் கூறுவதாவது:

## மரியாதை

நீங்கள் மரியாதையுடனும், கௌரவத்துடனும் மற்றும் பரிவுடனும் நடத்தப்படுவீர்கள். அனைத்து வேளைகளிலும் உங்களது கலாசாரம் மதிக்கப்படும்.

## தகவல் மற்றும் சேவைகள்

அறிவுரையாலோசனை மற்றும் சட்ட சேவைகள் உள்ளடங்க, உங்களுக்கு உதவக்கூடிய பலவித சேவைகள் குறித்தும் கூடிய விரைவில் உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

## சேவைகளைப் பெறல்

மருத்துவ உதவி, அறிவுரை-ஆலோசனை மற்றும் சட்ட உதவி ஆகியன உங்களுக்கத் தேவைப்பட்டால், அவை கிடைக்கும் பட்சத்தில் அவற்றை நீங்கள் பெறுவீர்கள்.

## குற்றச்செயல் விசாரனை குறித்த தகவல்கள்

நீங்கள் கேட்டால், காவல்துறையினரது விசாரணை எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லப்படும். ஆனால், சில தருணங்களில் காவல்துறையினரால் உங்களுக்கு சில விடயங்களைச் சொல்ல இயலாது.

## நீதிமன்ற விசாரனை குறித்த தகவல்கள்

நீதிமன்ற விசாரனை என்பது குற்றத்திற்காக குற்றவாளியை நீதிமன்றத்திற்கு முன் நிறுத்தும் செயலாகும். காவல்துறையினரால், அல்லது மிகவும் வினயமான சூழ்நிலைகளில் 'பொது நீதிமன்ற விசாரனை நெறியாளர்' (Director of Public Prosecutions) ரால் இவ் விசாரனை நடத்தப்படும்.

பாதிப்புற்றவர் என்ற முறையில், கீழ் வரும் விடயங்கள் உங்களுக்குச் சொல்லப்படும்:

- குற்றச்சாட்டுகள் என்ன என்பது அல்லது குற்றவாளியின் மீது குற்றச்சாட்டு ஏன் சுமத்தப்படவில்லை என்பது;
- குற்றச்சாட்டுகளில் மாற்றம் ஏற்படுத்தவோ அல்லது குற்றச்சாட்டுகளை மீளப் பெறவோ வழக்குத் தொடுப்போர் எடுக்கும் முடிவு எதுவும்;
- நீதிமன்ற விசாரனை நடைபெறும் திகதி மற்றும் இடம்
- மேல்முறையீடு அல்லது சிறைத் தண்டனை உட்பட, நீதிமன்றத்தின் இறுதி முடிவு

குற்றச்சாட்டுகளில் மாற்றம் ஏற்படுத்தவோ அல்லது குற்றச்சாட்டுகளை மீளப் பெறவோ வழக்குத் தொடுப்போர் யோசித்தால், பின் வரும் விதங்களில் குற்றச்செயல் இருக்கும்போது அவர்கள் உங்களுடன் கலந்து கதைக்க வேண்டும்:

- குற்றச்செயல் வினயமான பாலர்ரீதிக் குற்றமாக இருந்தால்;
- உடல்ரீதியாகவும், உள ரீதியாகவும், உள நோய் ஏற்படுத்தும் விதத்திலும் உங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தால்

ஆனால், கீழ் வரும் தருணங்களில் வழக்குத் தொடுப்போருக்கு உங்களுடன் கலந்து கதைக்க வேண்டிய தேவை இல்லை:

- அதைப் பற்றிக் கதைக்க உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால், அல்லது
- உங்களைக் கண்டுபிடிக்க இயலவில்லை என்றால்

## சாட்சியாக இருப்பது குறித்த தகவல்கள்

வழக்கு ஒன்றில் நீங்கள் சாட்சியாக இருந்து சாட்சியம் அளிக்கவேண்டும் என்றால், விசாரனை எப்படி நடைபெறும் என்பது குறித்தும், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தும் உங்களுக்கு சொல்லப்படும்.

## குற்றவாளியோடு தொடர்பு இருக்காது

உங்களுடைய வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது குற்றவாளியுடனும், குற்றவாளியின் சாட்சிகளுடனும் உங்களுக்குத் தொடர்பு ஏற்படாத வகையில் நீங்கள் பாதுகாக்கப்படுவீர்கள்.

## உங்களுடைய அந்தரங்கத்தன்மைக்குப் பாதுகாப்பு

நீதிமன்றம் வேறு விதமாகச் சொன்னால் ஒழிய, உங்களுடைய விலாசம் மற்றும் தொலைபேசி இலக்கங்களை நீங்கள் இரகசியமாக வைத்துக்கொள்ளலாம்.

## விசாரணைக்கு முன்பாக நடக்கும் நீதிமன்ற அலுவல்கள்

நீதிமன்ற விசாரணை நடைபெறுவதற்கு முன்பாக, குற்றம் நடந்ததா என்று கேட்கப்படும் (சிறு நீதிமன்ற விசாரணை போன்ற) விசாரனைக்கு நீங்கள் கட்டாயம் வரவேண்டும் என்று நீதிமன்றத்தால் உங்களுக்கு சொல்லப்பட்டாலொழிய நீங்கள் செல்ல வேண்டியதில்லை.

## சான்றாக எடுத்துச் செல்லப்பட்ட உங்களது பொருட்களைத் திருப்பித் தரல்

காவல்துறையினரோ அல்லது வழக்கு தொடுத்தவர்களோ உங்களது பொருட்களில் எதையும் சான்றாக எடுத்துச் சென்றிருந்தால், கூடிய விரைவில் அதைத் திரும்பப் பெறும் உரிமை உங்களுக்கு உள்ளது.

## உங்களுக்கான பாதுகாப்பு

குற்றவாளி ஜாமீனுக்கு விண்ணப்பிக்கும் பொழுது உங்களுக்குப் பாதுகாப்பு தேவைப்பட்டால் காவல்துறையினருக்கோ அல்லது வழக்கு தொடுத்திருப்போருக்கோ அதைத் தெரியப்படுத்துங்கள்.

## விசேட ஜாமீன் நிபந்தனைகள்

உங்களது குடும்பத்தினைப் பாதுகாப்பதற்காக குற்றவாளி உங்களுடன் தொடர்புகொள்ளக் கூடாது என்பதைப் போன்ற விசேட நிபந்தனைகள் எதுவும் குற்றவாளிக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தால் அது குறித்து உங்களுக்கு சொல்லப்படும்.

## ஜாமீன் குறித்த முடிவு

பாலியல் தாக்குதல் அல்லது மற்ற வினயமான தாக்குதலுக்கு நீங்கள் பலியானவர் என்றால், குற்றவாளிக்கு ஜாமீன் தரப்படுகிறதா இல்லையா என்பது உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

## பாதிப்புற்றோருக்கு ஏற்பட்ட தாக்கம் குறித்த வாக்குமூலம்

சில தருணங்களில் இழைக்கப்பட்ட குற்றம் உங்களை எவ்விதமாகப் பாதித்துள்ளது என்று நீதிமன்றத்திற்கு உங்களால் சொல்ல இயலலாம், இதற்கென உங்களுக்கு உதவியும் ஆதரவும் அளிக்கப்படும். இதை 'பாதிப்புற்றோரது தாக்க வாக்குமூலம்' (Victim Impact Statement) என்று அழைப்பர்.

## குற்றவாளி விடுவிக்கப்படும்போது

குற்றவாளி சிறையில் இருந்தால் அவர் சிறையிலிருந்து விரைவில் விடுவிக்கப்படப் போகிறாரா, சிறையிலிருந்து தப்பி விட்டாரா அல்லது 'நாள் விடுவிப்' (day release) பில் இருக்கிறாரா என்பது உங்களுக்குத் தெரிவிக்கப்படலாம்.

## நன்னடத்தைப் பிணை விடுவிப் (parole) பிற்காக

குற்றவாளியானவர் நன்னடத்தைப் பிணை விடுவிப்பிற்காக விண்ணப்பிக்கும் பொழுது இது குறித்து உங்களது கருத்து என்ன என்பதை நீங்கள் தெரிவிக்கலாம்.

## பண உதவி

வன்முறை பிரயோகிக்கப்பட்ட குற்றச்செயல் ஒன்றிற்கு நீங்கள் பலியானதன் காரணமாக நீங்கள் காயமுற்றிருந்தால், பண உதவி பெறுவதற்கு நீங்கள் தகுதி பெறலாம்.

## புகார் செய்யும் முறை குறித்த தகவல்கள்

'சாசன'த்தில் சொல்லப்பட்டுள்ளது போல் உங்களது உரிமைகள் நிறைவேற்றப்படவில்லை என்று நீங்கள் எண்ணினால் இது குறித்து நீங்கள் புகார் செய்யலாம், மற்றும் புகார் செய்வது எப்படி என்பது குறித்த தகவல்கள் வேண்டுமென நீங்கள் கேட்கலாம்.

## நீங்கள் குற்றச்செயலுக்குப் பலியானவர் என்றால் உங்களுக்கான உரிமைகள் உள்ளன

உதவி மற்றும் ஆதரவிற்காக 'பாதிப்புற்றோர் உதவி இணைப்' (Victims Access Line) பை 1800 633 063 எனும் இலக்கத்தில் அழையுங்கள்.

## பாதிப்புற்றோர் உரிமை சாசனம்

குற்றச்செயல் ஒன்றிற்கு நீங்கள் பலியாகியிருந்தால், உங்களுக்குள்ள உரிமைகளை முன்னெடுத்து வைத்துப் பாதுகாப்பதற்கென நி.ச.வே மாநிலத்தில் 'பாதிப்புற்றோர் உரிமை சாசனம்' ஒன்று நடப்பிலுள்ளது. நி.ச.வே மாநில அரசினது அனைத்துத் திணைக்களங்களுக்கும் இது செல்லுபடியாகும். பாதிப்புற்றோருக்கு ஆதரவு வழங்குவதற்காக மாநில அரசின் நிதியுதவியைப் பெறும் எவ்வொரு அரசு சாரா முகமைகளுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் (தனியார் துறை சட்ட அலுவலர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் நீங்க) இது செல்லுபடியாகும். நீங்கள் குற்றச்செயலுக்குப் பலியான ஒருவர் என்றால் நீங்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் மற்றும் உங்களுக்கு எவ்வாறு உதவி செய்யப்பட வேண்டும் என்று இந்த 'சாசனம்' எடுத்துரைக்கிறது. *பாதிப்புற்றோரது உரிமைகள் மற்றும் ஆதரவு சட்டம் 2013* –ல் இந்த 'சாசனம்' அடங்கியுள்ளது.

## 'குற்றச்செயலுக்குப் பலியானவர்' என்பது யாரைக் குறிக்கும்?

குற்றச்செயல் ஒன்றின் நேரடி விளைவாக தீங்கிற்கு ஆளாகும் நபர் ஒருவர் 'பாதிப்புற்றவர்' (victim) என்று *பாதிப்புற்றோரது உரிமைகள் மற்றும் ஆதரவு சட்டம் 2013* –ல் சொல்லப்படுகிறது.

## உரிமை சாசனத்தின் கீழ் எனது உரிமைகள் நிறைவேற்றப்படவில்லை என்றால் என்ன செய்வது?

1. பிரச்சினை குறித்து நீங்கள் யாருடன் தொடர்பில் இருக்கிறீர்களோ அவருடன் கதையுங்கள். இப்படிச் செய்வதால் பொதுவாக பிரச்சினைக்குத் தீர்வு காணப்படலாம்.
2. உங்களுக்கு இன்னும் திருப்தியில்லை என்றால், அவரது திணைக்கத்திற்கு எப்படி புகார் செய்வது என்று அந்த நபரைக் கேட்கும் அதிகாரம் உங்களுக்கு உள்ளது. தேவைப்பட்டால், மொழிபெயர்ப்பாளர் அல்லது மற்ற உதவிகளை ஏற்பாடு செய்ய திணைக்களத்தினால் இயல வேண்டும். புகார் செய்வதில் உங்களுக்கு உதவியாக இருக்க நபர் ஒருவரை நீங்கள் ஏற்பாடு செய்துகொள்ளலாம். இது உங்களுடைய நண்பராகவோ அல்லது பணியாளர் ஒருவராகவோ இருக்கலாம்.
3. திணைக்களத்தினரால் புகார் பார்வையிடப்பட்ட பிறகும் உங்களுக்குத் திருப்தியில்லை என்றால் 'பாதிப்புற்றோர் சேவை' (Victims Services) யுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம். புகாரில் உங்களுக்கு உதவுவதும், அது குறித்து என்ன செய்யப்படலாம் என்று உங்களுக்கு சொல்வதும் அவர்களது பணியாகும்.

## தொடர்பு விபரங்கள

தொலைபேசி.................... 1800 633 063

சிட்னி பெருநகர்ப் பகுதி.................... (02) 8688 5511

பூர்வகுடியினர் தொடர்பு இணைப்பு.................... 1800 019 123

தொலைநகல்.................... (02) 8688 9632

வேலைநேரங்கள்.................... காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை (பொது விடுமுறை நாட்கள் நீங்கலாக)

மின்னஞ்சல்.................... vs@agd.nsw.gov.au

வலைத்தளம்.................... www.lawlink.nsw.gov.au/vs

அனைத்து கடிதங்களையும் அனுப்பவேண்டிய முகவரி:.................... The Commissioner, Victims Services, Locked Bag 5118, Parramatta NSW 2124

© பிரசுரிமை: பாதிப்புற்றோர் சேவைகள், நி.ச.வே. மாநில அட்டர்னி ஜெனரல் மற்றும் நீதித் திணைக்களம் ஜுன் 2003 (புதுப்பிப்பு ஜுலை 2013). சொந்த உபயோகத்திற்காகவும், கல்வி மற்றும் அரசாங்கக் காரணங்களுக்காகவும் இந்த ஏட்டினைத் தாராளமாக மீளுற்பத்தி செய்துகொள்ளலாம். வேறெந்த வகையான பயன்பாட்டிற்கும் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றாக வேண்டும்.

மாற்று வடிவங்களில் இத் தகவல் கிடைக்கும்.

பொதுவான தகவல் என்ற முறையில் பயன்படுத்தப்படுவதற்காக 'பாதிப்புற்றோர் சேவை' யினால் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ISBN 978 1 922121 30 1 (FS10n • 07/2013)